# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்

---

[1980, யூலை மாதம் 17 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1980, யூலை மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் **வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 15.75** **தபாற் செலவு: ரூபா 6.75**

## 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்

[1980, ஜூலை மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 61/78
1180

**உணவு உற்பத்தி, இறக்குமதி, விற்பனை, விநியோகம் என்பனவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும், உணவு ஆலோசனைக் குழு ஒன்றைத் தாபிப்பதற்கும், (216 ஆம் அத்தியாயமான) உணவு, அவுடதங்கள் சட்டத்தை நீக்குவதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், சுசெர்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

### பாகம் I

### உணவு தொடர்பிலான தடைவிதிப்பு

2. (1) ஆளெவரும்— உணவு உற்பத்தி இறக்குமதி, விற்பனை, விநியோகம் என்பனவற்றின் மீதான தடைவிதிப்பு.

(அ) சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கின்றதும், சுகாதாரத்திற்குக் கேடான இயற்கையான அல்லது சேர்க்கப்பட்ட பதார்த்தத்தைத் தன்னகத்து அல்லது தன்மேல் கொண்டுள்ளதுமான எதேனும் உணவை ;

(ஆ) மனிதர் உட்கொள்ளக்கூடாததாயுள்ள எதேனும் உணவை ;

(இ) எதேனும் தூய்மையற்ற, அழுகலான, அருவருப்பான பதனழிந்த, சீரழிந்த அல்லது விலங்கின் நோய்த்துப் போன பதார்த்தத்தை அல்லது பதனழிந்த தாவரப் பதார்த்தத்தை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ கொண்டிருக்கின்றதான அல்லது பூச்சி மொய்த்ததான எதேனும் உணவை ;

(ஈ) கலப்படம் செய்யப்பட்ட எதேனும் உணவை ;

(உ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் சேர்க்கப்பட்ட எதேனும் பதார்த்தத்தைத் தன்னகத்து அல்லது தன்மேல் கொண்டுள்ள எதேனும் உணவை ; அல்லது

(ஊ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்றவகையிலான எதேனும் உணவை,

உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகாது.

(2) ஆளெவரும், நலத்துக்கொவ்வாத நிலைமைகளின்கீழ் எதேனும் உணவை விற்பனைக்காக உற்பத்தி செய்தலோ, தயாரித்தலோ, பேணிக்காத்தலோ, பொதியாக்குதலோ அல்லது களஞ்சியப்படுத்துதலோ ஆகாது.

(3) ஆளெவரும், நலத்துக்கொவ்வாத நிலைமைகளின்கீழ் விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட, தயாரிக்கப்பட்ட, பேணிக்காக்கப்பட்ட, பொதியாக்கப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட ஏதேனும் உணவை இறக்குமதிசெய்தலோ, விற்பனை செய்தலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.

கட்டுத்துண்டிடுதலும், பொதியாக்குதலும், விளம்பரப்படுத்தலும் பிறவும்

3. (1) ஆளெவரும், பொய்யான முறையில், பிழையூட்டும் முறையில், ஏமாற்றும்முறையில் அல்லது ஏதேனும் உணவுப் பொருளின் பண்பு, பெறுமதி, அளவு, சேர்வை, குணநலன் அல்லது பாதுகாப்பு தொடர்பாக வழுவான கருத்தை உண்டாக்கும் சாத்தியமுள்ளதான முறையில் அந்த உணவில் கட்டுத்துண்டு இடுதல், அதனைப் பொதியாக்குதல், பதனிடுதல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் அல்லது விளம்பரப்படுத்துதல் ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகக் கட்டுத்துண்டு இடப்படாத அல்லது பொதியாக்கப்படாத, அல்லது அவ்வொழுங்குவிதிகளுக்கு முரணாகக் கட்டுத்துண்டு இடப்பட்ட அல்லது பொதியாக்கப்பட்ட ஏதேனும் உணவை (1) ஆம் உட்பிரிவுக்கு முரணாகக் கட்டுத்துண்டு இடப்பட்டதென அல்லது பொதியாக்கப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

நியமம் விதித்துரைக்கப்பட்டுள்ளவிடத்து

4. ஏதேனும் உணவுக்கென நியமமொன்று விதித்துரைக்கப்பட்டிருக்குமிடத்து, ஆளெவரும், அந்த நியமத்திற்கு ஏற்பவொழுகவிராத ஏதேனும் உணவினை நியமம் விதித்துரைக்கப்பட்ட ஓர் உணவு என மயக்கமுண்டாக்கும் சாத்தியம் கொண்ட அத்தகைய முறையில் கட்டுத்துண்டிடுதல், அதனைப் பொதியாக்குதல், விற்பனை செய்தல் அல்லது விளம்பரப்படுத்துதல் ஆகாது.

மனிதர் உட்கொள்ளக் கூடாததாக்கப்பட்ட உணவை மனிதர் உட்கொள்வதற்கல்லாத வேறு நோக்கங்களுக்காக விற்பனை செய்தல்.

5. பிரதான உணவு அதிகாரியின் அல்லது அதற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளின் அனுமதியுடனும் அந்த அதிகாரியால் அல்லது அத்தகைய வேறு ஆளால் விடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கவும் தவிர, ஆளெவரும், பழுதான, அல்லது மனிதர் உட்கொள்ளக்கூடாததாக்கப்பட்ட ஏதேனும் உணவை விலங்கு உணவாகப் பயன்படுத்தப்படுவதற்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக விற்பனைக்கு முன்வைத்தலோ, வெளிக்காட்டிவைத்தலோ அல்லது விற்பனை செய்தலோ ஆகாது.

அணை நிபந்தனை.

6. (1) ஏதேனும் உணவின் உற்பத்தியாளர் ஒருவர் அல்லது விநியோகத்தர் ஒருவர் அல்லது தரகு முகவர் ஒருவர் அல்லது வணிகர் ஒருவர், அத்தகைய உணவின் தன்மை, பதார்த்தக்குணம், தரம் ஆகியன தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான துணை நிபந்தனையையும் எவரேனும் விற்பனையாளருக்குக் கொடுத்தாலன்றி, அத்தகைய விற்பனையாளருக்கு அத்தகைய உணவை விற்பனை செய்தல் ஆகாது.

(2) ஏதேனும் உணவின் விற்பனை தொடர்பில், அத்தகைய ஏதேனும் உணவின் உற்பத்தியாளரினால் அல்லது விநியோகத்தரினால் அல்லது தரகுமுகவரினால் அல்லது வணிகரினால் அந்த உணவின் விற்பனையாளருக்குக் கொடுக்கப்பட்ட உண்டியல், காசு நிருபம் அல்லது அனுப்புபொருட்பட்டியல், அந்த உணவின் தன்மை, பதார்த்தக்குணம், தரம் ஆகியன பற்றிய ஒரு விபரணத்தைக் கொண்டிருந்தால், அத்தகைய உண்டியல், காசு நிருபம் அல்லது அனுப்புபொருட்பட்டியல், அந்த உணவு தொடர்பில் இந்தப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் துணை நிபந்தனையொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

(3) ஏதேனும் உணவின் உற்பத்தியாளர் அல்லது விநியோகத்தர் அல்லது தரகுமுகவர் அல்லது வணிகர் எவரும், பொய்யான தாகவுள்ள துணை நிபந்தனையொன்றை (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுத்தலாகாது.

7. (1) இயைபான உணவு அதிகாரியினால் (இவரே உரிமமளிக்கும் அதிகாரியாக இருப்பார்) எவையேனும் வளவுகளுக்கு உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றி, ஆளெவரும் அத்தகைய வளவுகளில் ஏதேனும் உணவை உற்பத்திசெய்தலோ, தயாரித்தலோ, பேணிக்காத்தலோ, பொதியாக்குதலோ, களஞ்சியப்படுத்துதலோ அல்லது விற்பனைசெய்தலோ ஆகாது. உரிமமளித்தல்.

(2) ஆளெவரும், ஏதேனும் உணவை உற்பத்திசெய்வதற்கு, தயாரிப்பதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு, விற்பனைசெய்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற உரிமமொன்றினை வைத்திருந்தாலன்றியும் அவ்வுரிமத்தின் நியதி நிபந்தனைகளுக்கிணங்க அல்லாது செய்தாலன்றியும் அந்த உணவை உற்பத்தி செய்தலோ, தயாரித்தலோ, களஞ்சியப்படுத்துதலோ அல்லது விற்பனைசெய்தலோ ஆகாது.

## பாகம் II

## நிருவாகம்

8. (1) உணவு ஆலோசனைக் குழு என அழைக்கப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :— உணவு ஆலோசனைக் குழு.

(அ) குழுவின் தவிசாளராக இருக்கவேண்டிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ;

(ஆ) குழுவின் செயலாளராக இருக்கவேண்டிய உணவுக் கட்டுப்பாட்டு நிருவாகத்திற்குப் பொறுப்பாக உள்ள சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் ;

(இ) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்;

(ஈ) கொழும்பு மாநகரப் பிரதேசத்தின் நகர இரசாயனப் பகுப்பாய்வாளர் ;

(உ) பிரதான சுங்கச் சேகரிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ;

(ஊ) கொழும்பு மாநகரப் பிரதேசத்தின் பிரதான சுகாதார மருத்துவ அலுவலர் ;

(எ) (i) உணவு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர், அல்லது அவ் அமைச்சின்கீழுள்ள ஏதேனும் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர் ;

(ii) வியாபாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர், அல்லது அவ் அமைச்சின் கீழுள்ள ஏதேனும் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர் ;

(iii) உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினது அமைச்சைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர், அல்லது அவ் அமைச்சின் கீழுள்ள ஏதேனும் திணைக்களத்தைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான பிரதிநிதி ஒருவர் ;

(ஏ) கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும், இலங்கை கட்டளைகள் பணியகத்தைச் சேர்ந்தவருமான பிரதிநிதி ஒருவர் ;

(ஐ) மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்திலிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஊட்டச் சத்தியலர் ஒருவர் ;

(ஒ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உணவு நுணுக்கர் ஒருவர் ;

(ஓ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உணவியல் நிபுணர்கள் இருவர் ;

(ஔ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர் ; அவர்களுள் ஒருவர் வர்த்தக நலன்களுக்கான பிரதிநிதியாகவும், மற்றவர் கைத்தொழில் நலன்களுக்கான பிரதிநிதியாகவும் இருத்தல் வேண்டும் ;

(க) பாவனையாளர்களின் நலன்களுக்கான பிரதிநிதியாக இருப்பதற்கு அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர் ; அத்துடன்

(ங) பிரதான உணவு, அவுடதப் பரிசோதகர்.

(2) ஒராம் உட்பிரிவின் (ஒ), (ஓ), (ஔ), (க) ஆகிய பந்திகளின் கீழ் அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், பதவி விலகுவதன்மூலம், இறப்பதன் மூலம் அல்லது அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த குழுவின் மற்றைய உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் எந்தப் பதவியைக்கொண்டு குழுவின் உறுப்பினராக இருப்பதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு தகைமையுடையவராக உள்ளாரோ அந்தப் பதவியை அவர் வகிக்காதொழிவதன்மேல் குழுவின் உறுப்பினராக இல்லாதொழிதல்வேண்டும்

(4) குழுவானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும், அதன் பணிகளை நிறைவேற்றலாம்.

(5) குழுவின் ஏழு உறுப்பினர்கள் குழுவினது ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண்ணாக அமைதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, குழுவானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அக்கூட்டங்களின்போதான அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலும் அதன் சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

9. (1) இச்சட்டத்தை நிருவகிப்பதில் எழுகின்ற கருமங்கள் மீது அமைச்சருக்கு ஆலோசனை அளித்தலும், இச்சட்டத்தின்கீழ் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட வேறு பணிகளை நிறைவேற்றுதலும் உணவு ஆலோசனைக் குழுவின் கடமையாதல் வேண்டும். உணவு ஆலோசனைக் குழுவின் கடமைகள்.

(2) குழுவானது, தக்கதென அது கருதும் உப குழுக்களை, குழுவினால் கையளிக்கப்படக்கூடிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் குழுவினால் விதிக்கப்படக்கூடிய எவையேனும் நிபந்தனைகள் இருப்பின் அவற்றுக்கமைய, பிரயோகிப்பதற்கென, புரிவதற்கென அல்லது நிறைவேற்றுவதற்கென நியமிக்கலாம்; அத்துடன், குழுவின் உறுப்பினராகவிராத ஆட்களை அந்த உப குழுக்களுக்கு நியமிக்கலாம்.

10. (1) நான்காம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதைத்தவிர, இச்சட்டத்தினது அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினது ஏற்பாடுகளை அந்தந்த உள்ளூராதிகார சபையின் நிருவாக இடப்பரப்புக்குள் நிறைவேற்றுவதற்கும், வலியுறுத்துவதற்குமாக ஓர் உள்ளூராதிகார சபையின் ஒவ்வொரு நிருவாக இடப்பரப்புக்கும் ஓர் உணவு அதிகாரி இருத்தல் வேண்டும். உணவு அதிகாரி.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான உணவு அதிகாரி—

(அ) மாநகரப் பிரதேசமொன்றின் நிருவாக இடப்பரப்புத் தொடர்பில், அவ்விடப்பரப்புக்காக அமைக்கப்பட்ட மாநகரசபையாக இருத்தல் வேண்டும் :

(ஆ) வேறு ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் நிருவாக இடப் பரப்புத்தொடர்பில்—

(i) உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரினது விதப்புரையின்மீது அவ்விடப்பரப்புக்கான உணவு அதிகாரியாக அமைச்சரினால் அவ்விடப்பரப்புக்கான உள்ளூ ரதிகார சபை நியமிக்கப்பட்டிருக்குமிடத்து அந்த இடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட உள்ளூரதிகார சபையாக இருத்தல் வேண்டும் ; அல்லது

(ii) அவ்விடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட உள்ளூரதி காரசபை, (i) ஆம் உட்பந்தியின்கீழ் உணவு அதி காரியாக நியமிக்கப்பட்டிராதவிடத்து, அவ்விடப் பரப்புக்கான சுகாதார மருத்துவ அலுவலராதல் வேண்டும்

(3) சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் ஒவ்வொருவரும் எவ்விடப்பரப்புக்கென அவர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அவ்விடப் பரப்புக்குள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அந்த இடப்பரப்பில் உணவு அதிகாரிகளுக்குள்ள வேலையை கண்காணித்தலும் ஒருங்கிணைத்தலும் வேண்டும்.

(4) அவ்வோர் உள்ளூரதிகாரசபையினதும் நிருவாக இடப்பரப் புக்கும்—

(அ) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கருத்திற்குட்பட மதுவரிக்குட் படுத்தப்படற்பாலதான உணவு தொடர்பில் மதுவரி ஆணையாளர் உணவு அதிகாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் எந்த உணவின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதோ அந்த உணவுதொடர்பில் பிரதான சுங்கச் சேகரிப்பாளர் உணவு அதிகாரி ஒருவராக இருத் தல் வேண்டும் :

ஆயின், இச்சட்டத்தின்கீழ் உணவு அதிகாரி என்ற வகையில் பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்கு உரித்தாக் கப்பட்ட தத்துவங்களைச் சுகாதார சேவைகள் பணிப்பாளரி னால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் அலு வலருக்குப் பிரதான சுங்கச் சேகரிப்பாளர் கையளிக்க லாம்.

11. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, சுகாதார சேவை பணிப்பாளரே பிரதான உணவு அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(2) பத்தாம் பிரிவின்கீழ் எல்லா உணவு அதிகாரிகளுக்கும் உள்ள வேலையைப் பிரதான உணவு அதிகாரி கண்காணித்தலும் வழிப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும் வேண்டும்.

(3) பிரதான உணவு அதிகாரியானவர், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் நிறைவேற்றிவைத்தலும் வலியுறுத்துதலும் தொடர்பாக அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளை எவரேனும் உணவு அதிகாரிக்குவிடுக்கலாம் என்பதுடன், எந்த உணவு அதிகாரிக்குப் பணிப்புகள் விடுக்கப்படுகின்றனவோ அந்த உணவு அதிகாரி ஒவ்வொருவரும் அப்பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(4) பிரதான உணவு அதிகாரியானவர், அமைச்சரின் அங்கீகாரத்துடன் இச்சட்டத்தின்கீழ் தமக்குள்ள தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பெயர் குறித்து அல்லது பதவிகுறித்து எவரேனும் கீழ்நிலை அலுவலருக்குக் கையளிக்கலாம்.

**உள்ளூரதிகார சபையினுற் புரியப்படும் தவறுகை.**

12. உள்ளூரதிகாரசபையொன்றின் நிருவாக இடப்பரப்புக்கான உணவு அதிகாரி என்ற முறையில் ஓர் உள்ளூரதிகாரசபை இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது பிரதான உணவு அதிகாரியினுல் அவ்வுள்ளூரதிகார சபைக்கு விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை நிறைவேற்றுவதற்கு, வலியுறுத்துவதற்கு அல்லது அதற்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளது எனப் பிரதான உணவு அதிகாரி அறிக்கை செய்ததன் மேல், அமைச்சர் அதற்கெதிரான காரணம் காட்டுவதற்கு அவ்வுள்ளூரதிகாரசபைக்குச் சந்தருப்பமொன்றை அளித்தபின்னர், அவ்வுள்ளூரதிகாரசபை கடமை தவறியுள்ளதெனவும், அத்துடன் அத்தவறுகை பொதுமக்களின் நலன்களைப்பாதிக்கின்றதெனவும் திருப்தி அடையுமிடத்து, அவர், உள்ளூராட்சி எனும் விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந்த ஏற்பாட்டினை அல்லது பணிப்பை நிறைவேற்றும்படி அல்லது வலியுறுத்தும்படி அல்லது அதற்கு இணங்கியொழுகும்படி பிரதான உணவு அதிகாரிக்குத் தத்துவம் அளிக்கலாம்.

**அதிகாரம்பெற்ற அலுவலர்.**

13. (1) அமைச்சரானவர், எவரேனும் சுகாதார மருத்துவ அலுவலரை, உணவு, அவுடதப் பரிசோதகரை, உணவுப் பரிசோதகரை, பொதுச் சுகாதாரப் பரிசோதகரை, அத்துடன் இறைச்சியைச் சோதனை செய்தலும் கைப்பற்றுதலும் தொடர்பில் எவரேனும் விலங்கின அறுவை மருத்துவரை, உணவு அதிகாரி ஒருவரின் அதிகாரம்பெற்ற அலுவலராக இருப்பதற்கென அங்கீகரிக்கலாம்.

(2) உணவு அதிகாரியானவர் மதுவரி ஆணையாளராக அல்லது பிரதான சுங்கச் சேகரிப்பாளராக இருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, மதுவரி ஆணையாளரால் அல்லது பிரதான சுங்கச் சேகரிப்பாளரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அந்த உணவு அதிகாரியின் அதிகாரம்பெற்ற அலுவலராக இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ்த் தமது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் நியதிகளின்படி பொலிச அலுவலர் ஒருவருக்குள்ள தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

அதிகாரம்பெற்ற அலுவலரின் தத்துவங்கள்.

14. (1) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர், தமது கடமைகளைப் புரிவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குமாக—

(அ) எதேனும் பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றது, தயாரிக்கப்படுகின்றது, பேணிக்காக்கப்படுகின்றது, பொதியாக்கப்படுகின்றது அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்றது என அவர் நம்புகின்ற எதேனும் இடத்தினுள் நியாயமான எந்நேரத்திலும் பிரவேசிக்கலாம் என்பதுடன், அத்தகைய எதேனும் பொருளை சோதனையும் செய்யலாம் ; அத்துடன் அதன் மாதிரிகளை எடுக்கலாம் என்பதுடன், அந்தப் பொருளின் உற்பத்திக்கு, தயாரிப்புக்கு, பேணிக்காப்புக்கு, பொதியாக்குகைக்கு அல்லது களஞ்சியப்படுத்துகைக்குப் பயன்படுத்தப்படுகின்றது என அவர் நம்புகின்ற எதனையும் அவர் சோதனைசெய்யலாம்;

(ஆ) தேடுகை நோக்கத்திற்காக, எதேனும் பொருள் கொண்டு செல்லப்படுகின்றது என அவர் நம்புகின்ற எதேனும் வாகனத்தை நிறுத்தி அல்லது தடுத்து வைத்து அவ்வாகனத்தைத் தேடலாம் என்பதுடன், அத்தகைய பொருளைச் சோதனைசெய்து அப்பொருளின் மாதிரிகளையும் எடுக்கலாம் ;

(இ) எதேனும் பொருளை உள்ளடக்கியது என அவர் நம்புகின்ற எதேனும் கொள்கலத்தை அல்லது பொதியைத்திறந்து சோதனை செய்யலாம் ;

(ஈ) அதிகாரம்பெற்ற அலுவலர் சுகாதார மருத்துவ அலுவலராக அல்லது 13 (2) ஆம் பிரிவின்கீழ் மதுவரி ஆணையாளரால் அல்லது பிரதான சுங்கச் சேகரிப்பாளரால் அதிகாரம்பெற்ற ஆளொருவராக இருக்குமிடத்து, (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எதேனும் இடத்தில் காணப்படுகின்றவையும், எதேனும்

பொருள் தொடர்பாக இச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது வலியுறுத்துவதற்கு இயைபானதாகவுள்ள ஏதேனும் தகவலை உள்ளடக்கியுள்ளன என அவர் நம்புகின்றவையுமான எவையேனும் புத்தகங்களை, ஆவணங்களை அல்லது வேறு பதிவேடுகளைச் சோதனை செய்யலாம் என்பதுடன், அவற்றின் பிரதிகளைத் தயாரிக்கலாம் அல்லது அவற்றிலிருந்து பொழிப்புகளை எடுக்கலாம் ; அத்துடன்

(ஊ) எந்தப் பொருளின் மூலமான அல்லது எந்தப் பொருள் தொடர்பாக இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளன என அவர் நம்புகின்றாரோ அந்தப் பொருளை அவசியமாகக் கூடியவாறான அத்தகைய காலத்துக்குக் கைப்பற்றித் தடுத்துவைக்கலாம்.

(2) இப்பிரிவினதும் 15 ஆம் பிரிவினதும் நோக்கங்களுக்காக "பொருள்" என்பது—

(அ) மனிதர் உட்கொள்வதற்கெனப் பயன்படுத்தப்படுவதற்குக் கருதப்பட்டதாக அல்லது பயன்படுத்தக்கூடியதாக உள்ளதும், ஏதேனும் இறந்த விலங்கின், பறவையின் அல்லது மீனின் முழுமையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை உள்ளடக்குவதுமான ஏதேனும் உணவு எனப் பொருளாகும் ;

(ஆ) உணவை உற்பத்தி செய்வதற்கு, தயாரிப்பதற்கு, பேணிக் காப்பதற்கு, பொதியாக்குவதற்கு அல்லது களஞ்சியப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படக்கூடிய எதுவும் எனப் பொருளாகும் ; அத்துடன்

(இ) சுட்டுத்துண்டிடுவதற்கான அல்லது விளம்பரப்படுத்துவதற்கான ஏதேனும் பொருள் எனப் பொருளாகும்.

(3) இப்பிரிவின்கீழ் செயலாற்றுகின்ற அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர் அவ்வாறு தேவைப்படுத்தப்படின் தமது அதிகாரச் சான்றைக் காண்பித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவைப் பின்பற்றி அதிகாரம்பெற்ற அலுவலர் எந்த இடத்தினுள் பிரவேசிக்கின்றாரோ அந்த இடத்தின் சொந்தக்காரரும் அல்லது அந்த இடத்திற்குப் பொறுப்பாக உள்ள ஆளும், அத்துடன் அந்த இடத்தில் காணப்படும் ஒவ்வோர் ஆளும், தமது தத்துவத்துள்ளிருக்கும் நியாயமான எல்லா உதவிகளையும் அதிகாரம்பெற்ற அலுவலருக்கு அளித்தல் வேண்டுமென்பதுடன், அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலையும் அத்தகைய மாதிரிகளையும் அவருக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகித்துச் செயலாற்றுகின்ற எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலருக்கு ஆளெவரும் முட்டுக்கட்டையிடுதல் ஆகாது.

(6) எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலர், விற்பனைக்காக வெளிக்காட்டிவைக்கப்பட்ட ஏதேனும் உணவின் மாதிரிகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது அந்த உணவை வெளிக்காட்டிவைத்திருக்கின்ற ஆள், அதிகாரம்பெற்ற அலுவலருக்குத் தேவையான அந்த உணவின் அத்தகைய அளவை விற்கு மறுப்பின், அல்லது எந்த அளவை மாதிரிகளாக எடுப்பதற்கு அவருக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளதோ அந்த அளவை அந்த அலுவலர் எடுப்பதை அனுமதிக்க மறுப்பின், அவ்வாறு மறுக்கின்ற ஆள், (5) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவருக்கு முட்டுக்கட்டையிட்டுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதில் ஈடுபட்டிருக்கும் எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலருக்கு ஆளெவரும் வாய்மொழிமூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ பொய்யான அல்லது பிழையழி உய்க்கின்ற எவையேனும் கூற்றுக்களை அறிந்துகொண்டு அளித்தல் ஆகாது.

(8) உணவு விற்பனையாளர் ஒவ்வொருவரும் அதிகாரம் பெற்ற அலுவலரொருவரால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின், அந்த உணவை அந்த விற்பனையாளர் எந்த ஆளிடமிருந்து கொள்வனவு செய்தாரோ அந்த ஆள்பற்றித் தேவைப்படக்கூடிய பெயர், முகவரி, ஏனைய விபரங்கள் ஆகியவற்றை அதிகாரம்பெற்ற அலுவலருக்கு வெளிவிடுதல் வேண்டும்.

(9) அதிகாரம்பெற்ற அலுவலரின் அதிகாரமின்றி, இச்சட்டத்தின்கீழ் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் உணவை ஆளெவரும் எவ்விதத்திலேனும் அகற்றுதலோ, மாற்றுதலோ, அதில் கையிடுதலோ அல்லது வேறு வகையில் அதனோடு தலையிடுதலோ ஆகாது.

(10) இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் உணவு அதிகாரம்பெற்ற அலுவலரொருவரின் விருப்பத்தின்படி அது கைப்பற்றப்பட்ட கட்டிடத்தில் அல்லது இடத்தில் வைக்கப்படலாம் அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம், அல்லது அவரின் தற்றுணிப் பின்படி வேறேதேனும் இடத்திற்கு அகற்றப்படலாம்.

(11) இச்சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் கைப்பற்றுகையைப்பற்றி அதிகாரம்பெற்ற அலுவலர் இயைபான உணவு அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் தொடர்பான நடவடிக்கை முறை.

15. (1) எந்த ஒரு பொருள் தொடர்பாக ஒரு தவறு இழைக்கப்பட்டதோ அப்பொருளானது இச்சட்டத்தின்கீழ் அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரினால் கைப்பற்றப்பட்டுள்ளவிடத்து, அதிகாரியானவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவையும் மீறப்பட்டுள்ளனவென அல்லது அதன் கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ளனவெனத் திருப்திப்படுமிடத்தும், அத்துடன் கைப்பற்றப்பட்ட வேளையில் அத்தகைய பொருளின் சொந்தக்காரர் அல்லது அத்தகைய பொருளை உடைமை கொண்டுள்ள ஆள், அத்தகைய பொருளை அழிப்பதற்கென எழுத்துமூலம் சம்மதமளித்துள்ளவிடத்தும், அத்தகைய பொருள், அதிகாரி பணிக்கக்கூடியவாறாக அழிக்கப்படலாம் அல்லது வேறுவகையாகக் கையாளப்படலாம்.

(2) அத்தகைய பொருளின் சொந்தக்காரர் அல்லது அதனை உடைமைகொண்டுள்ள ஆள், அத்தகைய பொருளை அழிப்பதற்கென எழுத்துமூலம் சம்மதம் அளிக்காதவிடத்து அதிகாரியானவர் —

(அ) அத்தகைய பொருள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி மீறப்படவில்லையென அவர் திருப்திப்பட்டால், அத்தகைய பொருளை விடுவித்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவையும் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் எவையும் மீறப்பட்டுள்ளனவென அவர் திருப்திப்படுமிடத்து, உடனடியாக, அத்தகைய பொருளின் சொந்தக்காரருக்கு அல்லது அப்பொருளை உடைமை கொண்டுள்ள ஆளுக்கு அறிவித்தல் கொடுப்பதுடன், எந்த இடப்பரப்பில் தவறு இழைக்கப்பட்டதோ அந்த இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு உடனடியாக எப்பொருள் தொடர்பாக தவறு இழைக்கப்பட்டதோ அப்பொருளின் கைப்பற்றல் பற்றி அறிவித்தல் வேண்டும்.

(3) இரண்டு (ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்குத் தகவல் கொடுக்கப்பட்டதன்மீது அத்தகைய நீதிமன்றமானது—

(அ) விளக்கத்தின் பின்னர் பொருளின் சொந்தக்காரர் அல்லது அதனை உடைமைகொண்டுள்ளவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன்கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுள் எவற்றையும் மீறியமைக்காகக் குற்றவாளியெனக் காணின், அத்தகைய பொருள் நீதிமன்றம் பணிக்கும் வகையில் கையாளப்படுவதற்கென அதிகாரிக்குப் பறிமுதலாக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தவறுளர் எவரென அறியப்படாதவிடத்து அல்லது அவரைக் கண்டுபிடிக்க முடியாதவிடத்து, அத்தகைய பொருளானது, அத்தகைய மீறுகை தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படாமல், அதிகாரிக்குப் பறிமுதலாக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) விளக்கத்தின் பின்னர் பொருளின் சொந்தக்காரர் அல்லது அதனை உடைமைகொண்டுள்ளவர், இச்சட்டத்

தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுள் எவற்றையும் மீறியமைக்குக் குற்றவாளியல்லவெனக்காணின் அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது உடைமைகொண்டுள்ள ஆளுக்கு அத்தகைய பொருள் விடுவிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டும்.

பகுப்பாய்வு.

16. (1) அதிகாரம்பெற்ற அலுவலரொருவர், அவரால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் உணவை அல்லது அதன் ஏதேனும் பகுதியை அல்லது அவரால் எடுக்கப்பட்ட ஏதேனும் மாதிரியை (15 (1) ஆம் பிரிவின்கீழ் அது அழிக்கப்பட்டிருந்தாலொழிய), அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் பகுப்பாய்வுக்காக அல்லது சோதனைக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் உணவின் பகுப்பாய்வை அல்லது சோதனையைச் செய்துள்ளவிடத்து, இயைபான உணவு அதிகாரிக்கு அவர் ஒரு சான்றிதழை அல்லது அறிக்கையை வழங்குதல் வேண்டும் ; தமது சோதனையின் அல்லது பகுப்பாய்வின் பெறுபேறுகளை அந்தச் சான்றிதழில் அல்லது அறிக்கையில் அவர் தருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக "அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்" என்பது அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப் பகுப்பாய்வாளர் ஒருவரையும் உள்ளடக்கும்.

அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளர்

17. (1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரே அங்கீகரிக்கப்பட்ட பகுப்பாய்வாளராக இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், அமைச்சரானவர் ஓர் உள்ளூர் அதிகாரசபையில் ஏதேனும் நிருவாக இடப்பரப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரொருவரை அங்கீகரிக்கலாம். அந்த அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஆளெவரும்—

(அ) விதித்துரைக்கப்பட்ட தகைமைகளை உடையவராயில்லாவிட்டால் ; அல்லது

(ஆ) அந்த ஆள் உணவு விற்பனையுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில் அல்லது தொழிலில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஈடுபட்டிருந்தால்,

அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரொருவராக அங்கீகரிக்கப்படுதல் ஆகாது.

## பாகம் III

### சட்ட நடவடிக்கைகள்

தவறுகள்.

18. (1) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற அல்லது இச்சட்டத்தின்கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகத்தவறுகின்ற ஒவ்வொர் ஆளும் தவறொன்றுக்குக்

குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீப்பு அளிக்கப்படுவதன்மேல் பின்வரும் தண்டனைகளுக்கு ஆளாதலும் வேண்டும் :—

(அ) அத்தவறின் தன்மையானது பொது மக்களின் சுகாதாரத்திற்கு ஊறுவிளைக்கும் தன்மையினதாக இருக்குமிடத்து ஆறு மாதங்களுக்குக் குறையாததும் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் அத்துடன் ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் ;

(ஆ) அத்தவறானது 14 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவை அல்லது அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவை மீறியமைக்கானதாக இருக்குமிடத்து மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஓர் ஆண்டுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் அத்துடன் ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் ; அத்துடன்

(இ) அத்தவறு வேறு ஏதேனும் தவறாயின் —

(i) முதலாவது தவறுக்கு இருநூற்றைம்பது ரூபாவிற்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ;

(ii) இரண்டாவது தவறென்றுக்கு அல்லது பின்னைய தவறெவ்வொன்றுக்கும் மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஓர் ஆண்டிற்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும், அத்துடன் ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழான தவறென்றுக்குச் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அதே போன்ற அல்லது அதனையொத்த தன்மையினதான இரண்டாவது அல்லது பின்னைய தவறென்றிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து இரண்டாவது அல்லது பின்னைய தவறுக்கென அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றமானது —

(அ) குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் பெயரையும் முகவரியையும் அத்துடன் தவறையும் அந்தத் தவறிற்காக விதிக்கப்பட்ட தண்டனையையும் நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய செய்தித்தாளிலும் அல்லது அத்தகைய வேறு முறையிலும் வெளியிடுவிக்கலாம் ; அத்துடன் வெளியிடுவதற்கான செலவை குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட

வரின் மீது விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றென்றுற் போன்று அவரிடமிருந்து அறவிடலாம் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் உணவு உற்பத்திக்காகவும் இறக்குமதிக்காகவும் தயாரிப்பதற்காகவும் களஞ்சியப்படுத்துவதற்காகவும் விற்பனைக்காகவும் விநியோகத்திற்காகவும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை (ஏதேனுமிருப்பின்) இல்லாதாக்கலாம்; அத்துடன் அதற்கிணங்க இயைபான உரிமமளிக்கும் அதிகாரிக்கு அதைப்பற்றி அறிவிக்கலாம்.

தவறொன்று புரிகின்ற ஆள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படுதற்கு ஆளாதலும் நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கப்படுதலும்.

19. இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புரியும் ஒவ்வோர் ஆளும் பிடியாணை இன்றிக் கைதுசெய்யப்படலாம் என்பதுடன். இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான ஒவ்வொரு தவறும் நீதிவான் நீதிமன்றமொன்றினால் விளங்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கையைத் தொடுத்தல.

20. (1) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றிற்கான குற்றவழக்கொன்று—

(அ) அதிகாரம்பெற்ற ஓர் அலுவலராலன்றி; அத்துடன்

(ஆ) அந்தத் தவறைக் கண்டுபிடித்த தேதியிலிருந்து மூன்று மாதகாலம் கழிந்ததன் பின்னரும்,

தொடுக்கப்படுதல் ஆகாது.

(2) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான ஏதேனும் தவறிற்கான விளக்கத்தின்போது எந்நேரத்திலேனும் அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லாத வேறு எவரேனும் ஆள் அறிந்துகொண்டே தவறைப்புரிவதில் சம்பந்தப்பட்டவராயிருந்தார் என நீதிமன்றமானது அதன்முன்னர் எடுத்துக்கூறப்பட்ட சான்றின்மீது திருப்திப்படுமிடத்து நீதிமன்றமானது (1) (ஆ) என்னும் உட்பிரிவில் எது எப்படியிருப்பினும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டை மீளப்பெறலாம் என்பதுடன் அந்த வேறு ஆளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என்றுற்போன்று அந்த ஆளுக்கெதிராக நடவடிக்கையையும் எடுக்கலாம்.

வேறு ஆள் தவறுக்குக் குற்றவாளியாக உள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் எண்பிக்குமிடத்து

21. (1) இதனகத்துப்பின்னர் "குற்றஞ்சாட்டப்பட்டவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்படுமிடத்து 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரினால் உரியமுறையில் செய்யப்பட்ட முறைப்பாடொன்றன்மீதும் தமது உட்கருத்துப்பற்றி மூன்று நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வழக்குத்தொடுநர் தரப்பிற்குக் கொடுத்ததன்மேலும். உண்மையான தவறுளர் எனத் தாம் குற்றஞ்சாட்டுகின்ற வேறெவரேனுமாளை நீதிமன்றத்தின் முன்னர் கொணருவிக்க உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் தவறு புரியப்பட்டது என்பது எண்பிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய வேறு ஆளின் செயலினால் அல்லது தவறுகையினா

லேயே அத்தவறு புரியப்பட்டதென நீதிமன்றம் திருப்திப்படும் வகையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் எண்பிப்பாரெனின் அத்தவறுக்காக அத்தகைய வேறு ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கவும்படலாம் ; அத்துடன் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை வலுவிற்கிடுவதற்கென உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பயன்படுத்தியுள்ளார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் மேலும் எண்பிப்பாரெனின் அவர் அத்தவறிலிருந்து விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

(2) குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைத் தமக்குச் சாதகமாக்க நாடுமிடத்து—

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவர் சான்றளிப்பின் குற்றஞ்சாட்டப்பட்டவரையும் தமது வாதவுரைகளுக்கு ஆதாரமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரினால் அழைக்கப்படும் எவரேனும் சாட்சிக்காரரையும் குறுக்கு விசாரணை செய்வதற்கும் மறுதலிக்கும் சான்று கொடுப்பதற்கென எவரேனும் சாட்சிக்காரரை அழைப்பதற்கும் வழக்குத்தொடுநர் தரப்பும் அத்துடன் உண்மையான தவறுளர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றஞ்சாட்டுகின்ற ஆளும் உரிமையுடையவராதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வழக்கு நடவடிக்கைக்கான எவரேனும் சாட்சிக்காரர் அந்த வழக்கு நடவடிக்கைக்கான வேறெவரேனும் சாட்சிக்காரருக்குச் செலவைத் தொகைகளைச் செலுத்துவதற்காக நீதிமன்றம் தக்கதென அது கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(3) எத்தவறு தொடர்பில் எவரேனும் ஆளுக்கெதிராக இச்சட்டத்தின்கீழ் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட முடியுமோ அத்தவறென்று இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்டுள்ளதெனத் தோற்றான உணவு அதிகாரிக்குத் தோன்றுமிடத்தும் அத்துடன் முறைப்பாடு செய்யப்பட்ட தவறு வேறோர் ஆளின் செயலினால் அல்லது தவறுகையினால் ஏற்பட்டதெனவும் முதற் கூறப்பட்ட ஆள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எதிர்காப்பினை நிலைநாட்டக்கூடியவராயுள்ளாரெனவும், அந்த அதிகாரி நியாயமான அளவில் திருப்திப்படுகின்றவிடத்தும், அந்த அதிகாரியானவர் முதற் கூறப்பட்ட ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளை முதற்கண் தொடுப்பிக்காமல் அந்த வேறு ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளை முதற்கண் தொடுப்பிக்கலாம்.

அத்தகைய ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் முதல் கூறப்பட்ட ஆள் எந்தத் தவறுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கலாமோ அதே தவறுக்காக அந்தவேறு ஆள் குற்றஞ்சாட்டப்படலாமென்பதுடன் அத்தவறானது அந்தவேறு ஆளின் செயலினால் அல்லது தவறுகையினால் ஏற்பட்டதென எண்பிக்கப்பட்டதன்மேல் அந்தத் தவறுக்காக அந்தவேறு ஆளுக்கு எதிராகக் குற்றத்தீர்ப்பளிக்கவும்படலாம்.

எதிர்வாதங்கள்.

22. (1) இச்சட்டத்தின் கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழான தவறொன்றிற்கான குற்ற வழக்கொன்றில்—

(அ) 6 ஆம் பிரிவின்கீழ் எழுத்திலான துணை நிபந்தனையைத் தமக்குக் கொடுத்துதவிய இன்னொருவரிடமிருந்து தாம் உணவைக் கொள்வனவு செய்தார் எனவும் தாம் உணவைக் கொள்வனவு செய்த நேரத்தில் இருந்த அதே நிலையிலேயே அதனை விற்றாரெனவும் ;

(ஆ) அந்த உணவின் விற்பனை இச்சட்டத்தை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறிச்செயலாற்றுவதாக இருக்குமெனத் தாம் நியாயமான விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்து நிச்சயித்திருக்க முடியாதென ; அல்லது

(இ) விளம்பரமொன்றை வெளியிட்டமை பற்றிய தவறொன்று தொடர்பாக தொழிலின் சாதாரண நெறியின்போது வெளியீட்டிற்காக அவ்விளம்பரத்தைப் பெற்றாரெனவும் தவறொன்று புரியப்படும் என நம்புவதற்குக் காரணம் எதுவும் தமக்கு இருக்கவில்லையெனவும்,

கூறுவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிர்வாதமாக அமைதல் வேண்டும்.

(2) கலப்படம் செய்யப்பட்ட உணவை விற்பனை செய்த தவறுக்கான அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக உணவை விற்பனை செய்த தவறுக்கான குற்ற வழக்கொன்றில் அத்தகைய உணவானது கலப்படம் செய்யப்பட்டிருந்ததைத் தாம் அறிந்திருக்கவில்லை என்றும் அல்லது விற்பனையானது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாகவிருந்தது எனத் தாம் அறிந்திருக்கவில்லை என்றும் அல்லது கொள்வனவுகாரர் பகுப்பாய்விற்காக அந்த உணவைக் கொள்வனவு செய்தார் என்றும் அத்தகைய விற்பனையால் அவர் பங்கப்படவில்லை என்றும் கூறுவது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிர்வாதமாக அமைதல் ஆகாது.

அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை.

23. (1) சோதனைக்காக அல்லது பகுப்பாய்வுக்காக அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயம் பற்றி அந்த அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரால் கையொப்பமிடப்பட்ட அறிக்கையொன்றெனை அல்லது சான்றிதழ் ஒன்றெனக் கொள்ளப்படும் ஆவணமொன்று முரணான சான்று இல்லாதபோது, அதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்குப் போதுமான சான்றாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை அல்லது சான்றிதழ் எந்தக் கட்சிக்காரருக்கெதிராகக் காண்பிக்கப்படுமென்றதோ அந்தக் கட்சிக்காரர், விடயத்துக்கேற்றவாறு, அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரை அல்லது அங்கீகரிக்கப்பட்ட

மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரைச் சாட்சிக்காரராகக் கட்டளை விட்டழைக்கும்படி வேண்டுமிடத்து அவரைக் கட்டளைவிட்டழைப்பதற்கான செலவுகளை அக்கட்சிக்காரர் நீதிமன்றத்துக்குச்செலுத்துவதன்மேல் நீதிமன்றம் அவரைக் சட்டளைவிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன் சாட்சிக்காரராக அவரை விசாரணை செய்தலும் வேண்டும்

(3) ஒராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையை அல்லது சான்றிதழை காண்பிக்கக்கருதும் சட்சிக்காரர் அது எந்தக் கட்சிக்காரருக்கெதிராகக் காண்பிக்கக் கருதப்பட்டதோ அந்தக் கட்சிக்காரருக்கு அந்த அறிக்கையின் அல்லது சான்றிதழின் பிரதியொன்றையும் அதனைக் காண்பிக்கவிருக்கும் தமது உளக் கருத்துப்பற்றிய நியாயமான அறிவித்தலையும் கொடுத்திருந்தாலொழிய அந்த அறிக்கை அல்லது சான்றிதழ் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது.

24. (1) அதிகாரம்பெற்ற ஓர் அலுவலரால் பெறப்பட்ட மாதிரியொன்று அவரால் பாகங்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டுமென வேவைப்படுத்தப்படுமிடத்து அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒரு பாகம் அவரால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மாதிரி தொடர்பான குற்றவழக்குத் தொடுக்கப்படும் நோக்கில் அவரால் வைத்திருக்கப்பட்ட அப்பாகம் நீதிமன்றத்தில்காண்பிக்கப் படுதலும் வேண்டும். அதிகாரம்பெற்ற அலுவலர் நம்மிடம் வைத்திருக்கப் பட்ட மாதிரியின் பாகத்தை நீதிமன்றத்தின் முன்னர் காண்பித்தல்

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட மாதிரியின் அத்தகைய பாகத்தை அந்த மாதிரியின் வேறேதேனும் பாகத்தைப் பகுப்பாய்வுசெய்த அல்லது சோதனைசெய்த இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் பகுப்பாய்விற்காக அல்லது சோதனைக்காக நீதிவான் தமது சொந்தப் பிரேரணையின் மீது அனுப்பலாம் என்பதுடன் குற்றவழக்கிற்கான எவரேனும் கட்சிக்காரரின் வேண்டுகோள்ன்பேரில் அவ்வாறு அனுப்புதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் மாதிரியின் அத்தகைய பாகமானது எந்த இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்படுகின்றதோ அந்த இரசாயனப் பகுப்பாய்வாளர் மாதிரியின் அத்தகைய பாகமானது அவரால் பெறப்பட்டதிலிருந்து இருபத்தெட்டு நாட்களுக்குள் தமது அறிக்கையை அல்லது சான்றிதழை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(4) பகுப்பாய்விற்கான அல்லது சோதனைக்கான செலவானது நீதிமன்றம் பணிக்கக்கூடிய அத்தகைய கட்சிக்காரரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

25. பதினான்கு (1) (ஈ) என்னும் பிரிவின்கீழ் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரால் ஏதேனும் புத்தகம். ஆவணம் அல்லது வேறு பதிவேடு ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட பிரதியொன்று அல்லது எடுக்கப்பட்ட பொழிப்பொன்று அந்த அதிகாரம்பெற்ற அலுவலரால் உண்மையான பிரதி அல்லது பொழிப்பு என அத்தாட்சிப்படுத்தப்படின் அந்தப் பிரதி அல்லது பொழிப்பு அந்தப்புத்தகத்தை ஆவணத்தை அல்லது பதிவேட்டை அதிகாரம்பெற்ற அலுவலரால் எடுக்கப்பட்ட ஆவணத்தின் பிரதி அல்லது பொழிப்பு.

வைத்திருக்கின்ற அல்லது பேணிவருகின்ற அல்லது அந்தப் புத்தகத்தை ஆவணத்தை அல்லது பதிவேட்டை வைத்திருக்கச் செய்கின்ற அல்லது பேணிவரச் செய்கின்ற ஆளுக்கெதிராகச் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் அந்தப் புத்தகத்தில் ஆவணத்தில் அல்லது பதிவேட்டில் அடங்கியுள்ளவை பற்றிய முதற்றோற்றச் சான்றாக இருத்தலும் வேண்டும்.

ஊகங்கள்.

26. (1) இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினதும் நோக்கங்களுக்காக—

(அ) மனிதர் உட்கொள்வதற்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உணவு விற்பனைசெய்யப்படின் அல்லது விற்பனைக்கு முன்வைக்கப்படின், வெளிக்காட்டிவைக்கப்படின் அல்லது வைத்திருக்கப்படின் மாறாக எண்பிக்கப்படும் வரையில் மனிதர் உட்கொள்வதற்காக விற்பனைசெய்வதற்குக் கருதப்பட்டதென ஊகிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் உணவைத் தயாரிப்பதற்கு கையாளப்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வளவொன்றில் காணப்படுகின்றதும் மனிதர் உட்கொள்வதற்கெனப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றதுமான ஏதேனும் உணவு மாறாக எண்பிக்கப்படும் வரையில் மனிதர் உட்கொள்வதற்கென விற்பனைசெய்யப்படுவதற்கான உணவைத்தயாரிப்பதற்காகவோ அல்லது அந்த உணவுடன் கலப்பதற்காகவோ கருதப்பட்டதாக ஊகிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) உணவைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வளவொன்றில் காணப்படுகின்றதும் உணவைச்சேர்வை செய்வதில் அல்லது தயாரிப்பதில் பயன்படுத்தப்படக்கூடியதுமான ஏதேனும் பதார்த்தம், மாறாக எண்பிக்கப்படும் வரையில் மனிதர் உட்கொள்வதற்கான உணவைச் சேர்வை செய்வதில் அல்லது தயாரிப்பதில் பயன்படுத்தப்படுவதற்காகக் கருதப்பட்டதென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கலப்படம் செய்யப்பட்ட உணவை உற்பத்தி செய்தலாகிய தவறுக்கான குற்றவழக்கொன்றில்—

(அ) வேறு ஏதேனும் பதார்த்தத்தைச் சேர்ப்பதன்மூலம் உணவானது கலப்படம் செய்யப்பட்டதென ; அத்துடன்

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தமது உடைமையில் அல்லது தமது வளவொன்றில் அந்த வேறு பதார்த்தத்தை வைத்திருந்தாரென

எண்பிக்கப்பட்டவிடத்து மாறாக எண்பிக்கப்படும் வரையில் அந்த வேறு பதார்த்தத்தைச் சேர்ப்பதன்மூலம் அந்த உணவு குற்றஞ்சாட்டப்பட்டவரால் கலப்படம் செய்யப்பட்டது என ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் உணவைக் கொண்டிருக்கின்ற பொதியொன்று, அது எந்த ஆளினல் உற்பத்தி செய்யப்பட்டதோ அல்லது பொதியாக்கப்பட்டதோ அந்த ஆளின் பெயர் அல்லது அந்த ஆளின் முகவரி எனக் கொள்ளப்படுகின்ற ஒரு பெயரை அல்லது முகவரியைத் தன்னகத்து அல்லது தன்மேல் கொண்டிருக்குமிடத்து முரணுக எண்பிக்கப்படும் வரையில், பொதியினகத்து அல்லது பொதியின்மேல் எந்த ஆளின் பெயர் அல்லது முகவரி தோன்றுகின்றதோ அந்த ஆளினலேயே விடயத்திற்கேற்றவாறு, அந்தப் பொருள் உற்பத்திசெய்யப்பட்டதென அல்லது பொதியாக்கப்பட்டதென விளக்கப்படுதல் வேண்டும்.

ஆட்கள் குழுவால் புரியப்பட்ட தவறுகள்.

27. இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் ஆட்கள் குழுவால் தவறென்று புரியப்படுமிடத்து —

(அ) அந்த ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக இருப்பின் அத்தவறுனது புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளராக பொது முகாமையாளராக செயலாளராக அல்லது அவரை ஒத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோர் ஆளும்; அல்லது

(ஆ) அந்தக் குழுவானவது கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இல்லாதிருப்பின் அத்தவறுனது புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினரொருவராக இருந்த ஒவ்வொர் ஆளும்,

அத்தவறுனது தமது சம்மதமின்றி அல்லது ஒருப்பாடின்றிப் புரியப்பட்டது என்றும், தமது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அச்சூழ்நிலைகளில் அந்தத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்காகத் தாம் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் என்றும், அவர் எண்பித்தாலன்றி அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு.

28. இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்கா எவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் தொடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு எவையேனும் சட்டநடவடிக்கைகள் தொடுக்கப்படலாகாது.

குறித்தவில குற்றப்பணங்கள் உள்ளூராதிகார சபைகளின் நிதிகளுக்குச் செலுத்தப்படல்.

**29.** அதிகாரம்பெற்ற அலுவலரொருவரால் அல்லது உள்ளூரதிகார சபையாக உள்ள உணவு அதிகாரி ஒருவரால் தொடுக்கப்பட்ட குற்றவழக்கொன்றில் இச்சட்டத்தின்கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்று தொடர்பில் செலுத்தப்படும் அல்லது அறவிடப்படும் எல்லாக் குற்றப்பணங்களும், அந்த உள்ளூரதிகார சபையின் நிதிகளுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

உணவு நஞ்சாகியமை பற்றிய அறிவிப்பு.

**30.** ஏதேனும் உள்ளூரதிகார சபையின் நிருவாக இடப்பரப்புக்குள் தமது உயர்தொழிலைக் கொண்டு நடாத்தும் ஒவ்வோர் மருத்துவத் தொழிலரும், தமது அறிவுக்குப்பட்டவையும், அந்த இடப்பரப்புக்குள் ஏற்பட்டுள்ளவையுமான உணவு நஞ்சாகியமை பற்றிய எல்லா விடயங்களையும் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளருக்கு அல்லது அந்த இடப்பரப்பிற்கான சுகாதார மருத்துவ அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

வேறு எழுத்திலான சட்டம் உணவுக்கு ஏற்புடையதாதல்.

**31.** (1) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கருத்துக்குட்பட மதுவரிக்குட்படற்பாலனவான பொருட்களாகவுள்ள உணவு பற்றிய இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், அந்தக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டுமே ஒழிய அவற்றுக்கு பதிலானவையாக இருத்தல் ஆகாது.

(2) ஏதேனும் உணவு இறக்குமதி தொடர்பாக இச்சட்டத்தினதும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை வலுவுக்கிடும் நோக்கத்திற்காகவும், அத்துடன் அவ்வேற்பாடுகளை மீறுதல் அல்லது மீறிச் செயலாற்ற எத்தனித்தல் ஆகியவற்றைத் தடுக்கும் நோக்கத்திற்காகவும், அதற்குத் தண்டனையளிக்கும் நோக்கத்திற்காகவும், சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எந்த உணவின் இறக்குமதி இந்தச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டுள்ளதோ அந்த உணவிற்குச் சுங்கக் கட்டச் சட்டத்தை ஏற்புடையதாக்கும் நோக்கத்திற்காக, அந்தக் கட்டளைச்சட்டத்தின்கீழ் இறக்குமதிசெய்தல் தடைவிதிக்கப்பட்டுள்ள பண்டங்களாக அத்தகைய உணவு கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் உள்ளூரதிகாரசபையினால் ஆக்கப்பட்ட துணைவிதிகளுக்குமிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும் சந்தருப்பத்தில், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

32. (1) அமைச்சர் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டு மெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் என்பதுடன், குறிப்பாக அமைச்சர், உணவு ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :— ஒழுங்குவிதிகள்.

(அ) விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் அல்லது வகுப்பினதான பதார்த்தம் ஏதேனும் உணவில் இருப்பின் அல்லது அந்த உணவிற்குள் சேர்க்கப்பட்டிருப்பின் அல்லது அதிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது தவிர்க்கப்பட்டிருப்பின், அந்த உணவு அல்லது வகுப்பினதான உணவு கலப்படம் செய்யப்பட்டதென வெளிப்படுத்துதல் ;

(ஆ) உணவின் விற்பனைக்காகச் சுட்டுத்துண்டிடுதலும் பொதியாக்குதலும் விற்பனைக்கு முன்வைத்தலும் வெளிக்காட்டிவைத்தலும் அத்துடன் விளம்பரப்படுத்துதலும் ;

(இ) உணவுப் பொதிகளின் பருமன்அளவும் பரிமாண அளவும் நிறையளவும் மற்றைய அளவுக் குறிப்பீடுகளும் ;

(ஈ) ஏதேனும் உணவின் விற்பனை அல்லது விற்பனை நிபந்தனைகள் ;

(உ) ஏதேனும் உணவின் அளவு, பண்பு, பெறுமதி, சேர்வை அல்லது பாதுகாப்புப் பற்றிப் பாவனையாளர் அல்லது கொள்வனவுகாரர் ஏமாற்றப்படுவதை அல்லது பிழைவழி உய்க்கப்படுவதைத் தடுப்பதற்கு அல்லது பாவனையாளரின் அல்லது கொள்வனவுகாரரின் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவதைத் தடுப்பதற்கு என அந்த உணவில் ஆக்கக்கூறாக ஏதேனும் பதார்த்தத்தைப் பயன்படுத்துதல் ;

(ஊ) உணவின் சேர்வை, தூய்மை, தரம் அல்லது வேறு பருப்பொருள் ஆகியவற்றின் நியமங்கள் ;

(எ) இச்சட்டத்துடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் இணங்கியொழுகுவதை வலியுறுத்துவதற்காக உணவை இறக்குமதி செய்தல் ;

(ஏ) பாவனையாளரின் அல்லது கொள்வனவுகாரரின் நலனைக் கருதி அல்லது அவரின் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவதைத் தடுப்பதற்கு ஏதேனும் உணவைத் தயாரிக்கும், உற்பத்தி செய்யும், பேணிக்காக்கும், பொதியாக்கும், களஞ்சியப்படுத்தும் அத்துடன் பரீட்சிக்கும் முறை ;

(ஐ) (i) இச்சட்டத்தின்கீழான உரிமங்கள் எந்த ஆட்களுக்கும், எந்தச் சந்தருப்பங்களிலும் எந்த நியதி நிபந்தனைகளுக்கு அமையவும் வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம் என்பது ;

(ii) இச்சட்டத்தின் கீழான உரிமங்களுக்கான விண்ணப்பங்கள் எந்த முறையிலும், விதத்திலும் செய்யப்படலாம் அத்துடன் கையாளப்படலாம் என்பது ; அத்துடன்

(iii) உரிமம் ஒன்றைப் பெறுவதற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணம் ;

(ஒ) இச்சட்டத்தை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைத் தகுந்தமுறையில் வலுவுக்கிடுவதற்கும் நிருவகிப்பதற்கும் அவசியமென அமைச்சர் கருதுகின்ற அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படியும் அத்தகைய புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணிவரும்படியும் உணவு உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் ஆட்களைத் தேவைப்படுத்துதல் ;

(ஓ) அதிகாரம் பெற்ற அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் ஆகியோரின் தத்துவங்களும் கடமைகளும், அத்துடன் 14 ஆம், 15 ஆம் பிரிவுகளின் கருதப்பட்ட பொருட்களின் மாதிரிகளை எடுத்தலும், பொருட்களைக் கைப்பற்றுதலும் தடுத்து வைத்தலும் அல்லது பறிமுதல் செய்தலும் அத்துடன் கையாளுதலும் ;

(ஔ) இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள் ;

(க) உணவைப் பகுப்பாய்வு செய்தல் அல்லது சோதனையிடுதல், உணவின் மாதிரிகளை எடுப்பதற்கான நடவடிக்கைமுறை அத்துடன் அத்தகைய உணவைப் பகுப்பாய்வதற்காக அல்லது சோதனையிடுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய கட்டணத்தின் இருப்பு ; அத்துடன்

(ங) கலப்படம் செய்யப்பட்ட ஏதேனும் உணவை விற்பனை செய்தலும் விற்பனைக்கு இடம்பெயர்த்தலும் தொடர்பிலான தடைவிதிப்புக்களும் மட்டுப்பாடுகளும்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமெனபதுடன், வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்பின் வசதியான அளவு விரைவில் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட வேண்டிய தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

33. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,— பொருள்கோடல்.

"கலப்படம் செய்யப்பட்ட" என்பது—

(அ) சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிப்பதாக உணவை ஆக்கும் வகையில், அல்லது

(ஆ) அதன் பண்பை, பெறுமதியை, சேர்வையை குணநலனை அல்லது பாதுகாப்பைப் பாதிக்கும் வகையில்,

பதார்த்தமொன்றை உணவின் ஆக்கக்கூறாகச் சேர்த்தல் அல்லது உணவிலிருந்து ஏதேனும் அமைகூறை விட்டுவிடுதல் அல்லது வேறேனும் பதப்படுத்துகைக்கு அல்லது பதனிடுகைக்கு உணவை உட்படுத்தல் எனப்பொருள்படும் ;

"விளம்பரம்" என்பது, ஏதேனும் உணவின் விற்பனையை அல்லது கையுதிர்ப்பை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேம்படுத்தும் நோக்கத்திற்காக எத்தகையதுமான எவ்வழியிலேனும் செய்யப்படும் ஏதேனும் பகர்வையும் உள்ளடக்கும் ;

"உணவு" என்பது மனிதருக்கான உணவாக அல்லது பானமாகப் பயன்படுத்தப்படுவதற்கென உற்பத்தி செய்யப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட அல்லது பகர்வுசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் எனப் பொருள்படும் என்பதுடன், உணவின் சேர்வையில் அல்லது தயாரிப்பில் சாதாரணமாக உள்ளடங்கும் அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருளையும் உள்ளடக்கும் ;

"அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்" என்பது அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆளெனப் பொருள்படும் என்பதுடன், 8 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காகத் தவிர, மேலதிக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராக, பிரதி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராக, சிரேட்ட உதவி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராக அல்லது உதவி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"நலத்துக்கொவ்வாத நிலைமைகள்" என்பது உணவின் தூய்மையை தூசால், அழுக்கால் அல்லது கழிவுப்பொருளால் கெடுக்கக்கூடிய அல்லது உணவைச் சுகாதாரத்திற்கு ஊறுவிளைக்கக்கூடியனவாக்குகின்ற அத்தகைய நிலைமைகள் அல்லது சூழ்நிலைகள் எனப் பொருள்படும் ;

"சுட்டுத்துண்டு" என்பது உணவுக் கொள்கலத்தின் மீதுள்ள அல்லது அதனோடு இணைக்கப்பட்டதாகவுள்ள எழுதப்பட்ட, அச்சிடப்பட்ட, உருவரைத் தகட்டிலிடப்பட்ட குறியிடப்பட்ட, புடைப்பிக்கப்பட்ட அல்லது மேல் பதிக்கப்பட்ட சிட்டையை, வணிகக்குறியை, குறியீட்டை, படத்தை அல்லது வேறு விவரணத்தை உள்ளடக்கும் ;

"சுட்டுத்துண்டிடுதல்" என்பது சுட்டுத்துண்டு ஒன்றையும், உணவுடன் தொடர்புடைய அல்லது இணைந்திருக்கும் எழுதப்பட்ட, அச்சிடப்பட்ட அல்லது வரையுருவான ஏதேனும் சாமானையும் உள்ளடக்கும் ;

"உள்ளூரதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமசபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும் ;

"உற்பத்தி செய்தல்" என்பது விற்பனைக்காக ஏதேனும் உணவைத் தயாரித்தல் எனப் பொருளாகுமென்பதுடன், சில்லறை விற்பனையின் சாதாரண நடைமுறையில் உணவைப் பொதியாக்குதல் தவிர, உணவை ஆக்குதல், மாற்றுதல், மெருகிடுதல், பொதியாக்குதல், அதில் சுட்டுத்துண்டிடுதல் அல்லது வேறுவகையாக உணவைப் பதனிடுதல் என்பவற்றுக்கான ஏதேனும் செய்முறையையும் அல்லது செய்முறையின் ஒரு பாகத்தையும் உள்ளடக்கும் ;

"மருத்துவத் தொழிலர்" என்பது மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"பொதி" என்பது ஏதேனும் உணவு முழுமையாகவோ பகுதியாகவோ உள்ளடக்கப்பட்டுள்ள, வைக்கப்பட்டுள்ள அல்லது பொதியாக்கப்பட்டுள்ள ஏதேனுமொன்றை உள்ளடக்கும் ;

"வளவுகள்" என்பது ஏதேனும் உணவுப் பொருள் விற்பனை செய்யப்படும் அல்லது விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படும் அல்லது களஞ்சியப்படுத்தப்படும் ஏதேனும் கடையை, விற்பனைச் சாலையை அல்லது இடத்தை உள்ளடக்கும் ;

"இயைபான உணவு அதிகாரி" என்பது 10 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உணவு அதிகாரி எனப் பொருளாகும் ; அத்துடன்

"விற்பனை செய்தல்" என்பது பணத்திற்காக அல்லது கடனுக்காக அல்லது கொடுத்துமாற்றல் மூலம், அத்துடன் மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்தல் எனப் பொருளாகும் என்பதுடன் "விற்பனை" என்பது நேரொத்த பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும் ;

"விலங்கு மருத்துவர்" என்பது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர், மருத்துவத் தொழிலர் சட்டத்தின் கீழ் விலங்கு மருத்துவராக அல்லது விலங்கு மருத்துவத் தொழிலராகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் எனப் பொருளாகும்.

34. (1) (216) ஆம் அத்தியாயமான) உணவு அவுடதங்கள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. நீக்கங்களும் பேணல்களும்.

(2) உணவு, அவுடதங்கள் சட்டம் நீக்கப்பட்டிருப்பினும், உணவுக் கலப்படத்தைத் தடுப்பது தொடர்பில் அச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முன்னர் வலுவில் இருந்தவையுமான ஒழுங்குவிதிகள், அவை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதவையாகவிராதவிடத்துத் தவிரவும் ஒவ்வாதவையாகவிராத அளவுக்கும், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் மாற்றப்படும்வரை, திருத்தப்படும்வரை அல்லது ஒழிக்கப்படும்வரை தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.